பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 10 2025 SATURDAY 7.15 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- பீகார் சட்டப்பேரவைத் தேர்தலின்போது அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- மகாராஷ்ட்ரா மாநிலம் Nandurbar மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

- தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் பலன்கள் அடித்தட்டு மக்களுக்கு சென்றடைந்துள்ளதாக கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் வாகனங்கள், நுகர்பொருட்கள், மின்னணுப் பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பீகாரில் சட்டப்பேரவைத் தேர்தலின்போது அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் வெளிமாநிலங்களில் பணிபுரியும் அம்மாநிலத்தை சேர்ந்த வாக்காளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே, பீகார் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக அடுத்த மாதம் 6-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 121 தொகுதிகளில் வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

18 மாவட்டங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் ஆயிரத்து 698 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

<<<<<>>>>>

குஜராத்தில் புதிதாக பதவியேற்ற அமைச்சர்கள் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

தந்தேரஸ் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதையொட்டி, துணை முதலமைச்சர் திரு ஹர்ஷ் சங்வி, அமைச்சர்கள் திரு நரேஷ் பட்டேல், திரு ரிஷிகேஷ் பட்டேல், டாக்டர் Pradyumanvaja உள்ளிட்டோர் தங்களது துறைக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

<<<<<>>>>>

தீபாவளி பண்டிகை நாளை மறுநாள் கொண்டாடப்படுவதை யொட்டி, பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன.

ஜப்பானின், Shimane பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும், இந்திய சமூகத்தினரும் ஒருங்கிணைந்து தீபாவளி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

மியான்மரில் Yangon தேசிய அரங்கத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளும் ஒருங்கிணைந்த தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்றன.

ஹங்கேரியின் Budapest இந்திய தூதரகம், ஃபிஜி நாட்டின் Suva நகரம், துபாய் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இந்திய வம்சா வளியினர் தீபாவளி கொண்டாடினர்.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் Nandurbar மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயமடைந்துள்ளனர்.

Astamba புனித யாத்திரைக்கு சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனத்தில் 40-க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாகவும், 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

Dhanteras பண்டிகை வட மாநிலங்களில் இன்று கொண்டாடப்பட்டது.

தன்வந்திரி ஜெயந்தியாக கொண்டாடும் இந்நாளில் மக்கள் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருட்களை வாங்குவதற்கான உகந்த நாள் என்று கருதுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 44 Sec. )

இதனிடையே, கேரளாவின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இடுக்கி, கோட்டயம், பத்தனம்திட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும், மலப்புரம், கோழிக்கோடு, கன்னூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா, கர்நாடகா கடலோரப்பகுதியில் மீனவர்கள் வரும் 22-ஆம் தேதிவரை கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அந்த மையம் எச்சரித்துள்ளது.

நெடும்கண்டம் பகுதியில் ஏராளமான வீடுகளில் வெள்ள நீரால் சூழ்ந்துள்ளது.

முல்லைப்பெரியாறு, கல்லாறு அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் பயணிகள் உடனான நேரடி கலந்தாய்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய சென்னை ரயில்வே கோட்டத்தின் கூடுதல் மேலாளர் திரு தேஜ் பிரதாப் சிங், இம்மாதம் 8-ஆம் தேதி தொடங்கி, பயணிகளிடம் நேரடியாக ரயில் சேவையை மேம்படுத்துவது குறித்த ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் பெறப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த ரயில் நிலையத்தில் உள்ள நடைமேடைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், பயணிகளுக்கான கூடுதல் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

முதியோர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அனைத்து நடைமேடைகளிலும் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர் வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சென்னை நகரின் பாரம்பரிய சின்னமாக திகழும் எழும்பூர் ரயில் நிலையத்தை, உலக அளவில் சிறந்த ரயில் நிலையமாக மேம்படுத்துவதற்கான முயற்சிகளை ரயில்வே நிர்வாகம் மேற்கொண்டு வருவதாகவும் திரு தேஜ் பிரதாப் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை சம்பவத்திற்கு பிரிட்டன் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், பங்களாதேஷில் ஜனநாயக அரசு மீண்டும் அமைவதற்கு அனைத்து ஆதரவும் அளிக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு Alan Campbell, பங்களாதேஷில் சிறுபான்மையினர் சுதந்திரமாக செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

மொசாம்பிக்கில் எண்ணெய் கப்பலின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 இந்தியர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

எண்ணெய் கப்பலில் இருந்து துறைமுகத்திற்கு இவர்களை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதாக மொசாம்பிக்கில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த படகில் 14 இந்திய தொழிலாளர்கள் இருந்ததாக தெரிகிறது.

இதில் ஆறு தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய 5 தொழிலாளர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

போரினால் பாதிக்கப்பட்ட காஸாவுக்கு 7 ஆயிரத்து 200 டன் நிவாரணப் பொருட்களுடன் ஐக்கிய அரபு அமீரகத்தின் கப்பல் இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் 4 ஆயிரத்து 680 டன் உணவுப்பொருட்களும், 2 ஆயிரத்து 160 டன் குளிர்காலத்திற்கான கூடாரப் பொருட்கள் மற்றும் துணி வகைகளும், 360 டன் மருந்துப் பொருட்களும் அடங்கும்.

ஆபரேஷன் Chivalrous Knight என்று அழைக்கப்படும் இந்த நிவாரண உதவித் திட்டம் மூலம் காஸா மக்களுக்கு இந்த உதவி அளிக்கப்படுகிறது.

<<<<<>>>>>

மூச்சுத்திணறலை சரிசெய்யும் Nafithromycin என்ற புதிய மருந்தை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

*புதுதில்லியில் இன்று மருத்துவ பயிலரங்கு ஒன்றை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், மூச்சுத்திணறல் பாதிப்பை சரிசெய்வதோடு மட்டுமின்றி, புற்றுநோய் சிகிச்சை மற்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வகையில் Nafithromycin என்ற எதிர் உயிரி மருந்து செயல்படும் என்றும் தெரிவித்தார்.*

*அறிவியல் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.*

*<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 15-11, 15-9 என்ற நேர் செட்டுகளில் சீனாவின் Liu Si Ya -ஐ வென்றார்.*

---------------

*ஆசிய துடுப்புப்படகு சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.*

*வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் மற்றும் நான்கு பேர் கொண்ட குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.*

*மற்றொரு எட்டு பேர் அடங்கிய ஆடவர் குழு பிரிவிலும், மகளிர் இரட்டையர் பிரிவிலும் வெள்ளிப்பதக்கத்தை இந்தியா வென்றது.*

*<<<<<END>>>>>*